# திருநீறு

By

S. T. இரத்தினம்

காந்தி அச்சகம், 1970.

விலை பை. 20

# திரு நீறு.

மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவதுநீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன்றிரு வாலவாயான்
றிருநீறே.
(திருஞானசம்பந்தர்)

திருநீற்றுப்பதிகம் முழுவதற்கும் சுருக்கிப் பொருள்கூறினுல் "பாவிகளின் பாவத்தைநீக்கி, இம்மையிலும் மறுமையிலும் தேவ மக்களாகப் பேரின்ப வாழ்வில் புகுத்துவது திருநீறே" என்பது.

திருநீறு என்முல் அர்த்தமென்ன?

திரு = பரிசுத்தம். நீறு = நீற்றப்பட்டவஸ்து.

எதை நீற்றுவது? சாணத்தை.
சாணத்தைநீற்றி அதைப் பூசுவதின் அர்த்தமென்ன?
சாணத்தில் ஒட்டும் சக்தி-புழுக்கும் சக்தி-நாறும்சக்தி

இருப்பதுபோல, மனிதனிடத்திலும் மும்மலங்களாகிய காமம்–வெகுளி–மயக்கம் என்ற முக்குற்றங்களிருக்கின்றன. இதை உதாரணமாக்கியே சாணத்தை உபயோகித்தார்கள். சமஸ்கிருதத்தில் இம்முக்குற்றங்களையும் ஆணவம்–காமியம்–மாயை என்று கூறினார்கள்.

1. ஒட்டும் சக்தி = சாணம் மண்ணில் விழுந்தால் மண்ணை ஒட்டிக்கொள்ளும், உமியில் விழுந்தால் உமியை ஒட்டிக்கொள்ளும். அதுபோல் மனிதன் மண்–பெண்–பொன் ஆசைகளால் ஒட்டப்பட்டு பாசபந்தங்களுக்கு அடிமையாகிவிடுகிறான். இவனுடைய வாழ்க்கை இவனுக்கும், மற்றவர்கட்கும் பயன் விளைவியாது. இறைவனும் இவனுக்கு இன்னருள் பலியாது விலகிநிற்பான்.

2. புழுக்கும் சக்தி = சாணத்தில் புழு உண்டாகி நெளிவதும் குடைவதும்போல, மனிதனுக்கு வெகுளி என்ற அகங்காரம் உண்டானவுடன், அவன் இருதயத்தில் அமைதி குலைந்து, மனநிலை தவறி தகாதவை புரிகிறான். சமாதானமின்றி தட்டுக்கெட்டுத் தடுமாறுகிறான்.

3. நாறும் சக்தி = அறிவீனத்தால் மயங்குகிறான். அறிவீனனை இகழுவர். அசுத்தமான இடத்தில்

போனதும் சீ நாறுகிறது என்று அந்த இடத்தைவிட்டு அகன்றுவிடுகிறோம். பன்றி முதலிய அசுத்தப் பிராணிகளோ அந்த இடத்தை விரும்பி அணுகுவதுபோலக் கற்பில்லா மூர்க்கரை மூர்க்கரே முகப்பர். அவன் அறிவுடையவனாக, அவனைப்போன்ற பலரால் போற்றப்படினும், மெய்ப்பொருள் காணும் அறிவு அவனிடம் இராது. உலகப்பொருளும் அறிவும் ஆடம்பரமும் உடையவனாயிருந்தும் இறைவனுக்கு அந்நியமாய் வாழுகிறான்.

இம்முக்குற்றங்களும் நீங்கி இவன் விடுதலையாக, இவனைத் தெய்வ அக்கினி சுட்டெரிக்கவேண்டும். எது போல என்றால், சாணத்தை நெருப்புப்பற்றி எரிக்கும் போது, சாணம் சாம்பலாகி முக்குற்றங்களும் நீங்கி சுத்தமாவதுபோல; மனிதனைத்தெய்வ அக்கினிபற்றிக் கொள்ளும்போது, அவனிலுள்ள முக்குற்றங்களும் நீங்கி, மனம் மாறுதலாகிய உள்ள சுத்தி என்னும் மாற்றிப் பிறக்கும் தன்மை பெறுகிறான். இதையே பட்டினத்தார்,

“நீற்றைப் புனைந்தென்ன நீராடப் போயென்ன
நீ மனமே
மாற்றிப் பிறக்க வகையறிந்தாயில்லையே
மானிலத்தில்

ஏற்றிக்கிடக்கும் எழுகோடி மந்திரம் என்ன
கண்டாய்?

ஆற்றில் கிடந்து துறை அறியாமல்
அலைகின்றையே!''

என்கிருர். திருநீற்றின் அர்த்தமே மாற்றிப் பிறக்க வேண்டும் என்பதாம்.

சிவவாக்கியர் கூறுவதையும் கவனிப்போம்:
“இருக்கு நாலுவேதமும் எழுத்தறவே ஓதினும்
பெருக்க நீறு பூசினும் பிதற்றினும் பிரான்
இரான்;

உருக்கி நெஞ்சை உட்கலந்து உண்மைகூற
வல்லிரால்

சுருக்க மற்ற சோதியைத் தொடர்ந்து
கூடலாகுமே''.

திருநீற்றை எவ்வளவு அதிகமாய்ப் பூசினுலும் இறைவன் நம்மோடிரான்: உண்மை மனதோடு நம் பாவ நிலைமையின் பரிதாபத்தை உணர்ந்து, கடவுள் நம்மேல் வைத்த அன்பினுல் நம் நெஞ்சம் உருகி அவரை அணுகும்போது, அவருடைய வெளிச்சத்தால் தெளிவு பெற்று, அவரோடு ஐக்கியமாகி வாழுவோம் என்று கூறுகிருர்.

சாமவேதம்:

''சிருஷ்டிகர்த்தாவும், ஜகத் ரட்சகருமான பிரஜாபதி என்ற மூலபுருஷர் தம்மைத்தாமே பலியிட்டார்''.

திருவருட்பா:

படமுடியாதினித்துயரம் படமுடியா தரசே
பட்டதெல்லாம் போதும் இந்தப் பயந்தீர்த்
திப்பொழுதென்
உடலுயிர் ஆதிய வெல்லாம் நீ எடுத்துக்
கொண் டுன்
உடலுயிர் ஆதிய வெல்லாம் உவந்தெனக்கே
அளிப்பாய்''.

இவைபோன்ற பக்தர் வாக்குகளைக் கவனிக்கும்போது: கடவுளே நம்மேல் இரக்கங்கொண்டு, முக்குற்றங்களுக்கு அடிமைப்பட்டுழலுகின்ற நம்மைத் தமது நீதியின்படி தண்டித்து எரித்து அழித்துவிடாமல், நமக்காகத் தாமே மானிடரின் பதிலாளியாக மனித உடலெடுத்து, பாவ ஆக்கினைகளைத் தாமே ஏற்று, பாவங்களை நீக்கும் கிருபாதார பலியாகத் தம்மையே நீறு செய்தார்.

நீற்றப்பட்டு அவர் ஒழிந்துபோகவில்லை. ஒழிந்து போயிருப்பாராகில் திருநீற்றுப் பதிகம்:

கடவுள் நம்மேல் வைத்த அன்பைக்கண்டு எவ்வாறு நெஞ்சம் உருகக்கூடும் எனக் கேட்போமாயின்

திருவெண்காடர் புராணம், புத்தரை வாதில் வென்ற சருக்கம் 76-ம் செய்யுள், ருக்வேதம், சாமவேதம், இராமலிங்கசுவாமிகள் முதலியோர் கூறுவதையும் கவனிக்க:

*நீற்றினை அணிந்தது என் இன்னிறைவன் என்றே*
*சாற்றினை உயிர்க்கிடர் தணிப்ப என எண்ணுய்,*
*தோற்றியுள தம்புதல்வர் துன்பமுறு மந்நோய்*
*மாற்றும் வகை அன்னையர் அருந்திய மருந்தாம்.*

தன்பிள்ளைகள் நோயால் வருந்துவதைக்கண்ட தாய், தானே பிள்ளைக்காக மருந்துண்டு, பத்தியங் காத்து, அதனுல் உண்டான பாலைப் பிள்ளைக்கு ஊட்ட, பிள்ளை வியாதி நீங்கிப்பிழைத்து இன்புறுவதுபோல, கடவுளும், பாவ நோயால் வருந்துகின்ற மானிடருக்காகத்தன்னையே தியாகஞ்செய்வதற்கு அடையாளமான நீற்றினை அணிந்தார்.

ருக்வேதம், புருஷசூக்தம்:

"விஸ்வகர்மா எனப்பட்ட பிரஜாபதியாகிய புருஷன் தன்னையே பலியாக்கி, இரத்தம்சிந்தி நம்மை மீட்டுக்கொள்வாளுகவும்".

"போதந்தருவது நீறு, புன்மைதவிர்ப்பது நீறு, முத்திதருவது நீறு, சத்தியமாவது நீறு, பத்திதருவது நீறு, சித்தி தருவது நீறு, மதியைத்தருவது நீறு, வருத் தந்தணிப்பது நீறு, வானமளிப்பது நீறு என்று கூறுவ தெல்லாம் வெறுங்கூற்ருகும்.

அவ்வாறு வெறுங் கூற்ருகாமல் நமக்கு அடைக் கலமாக வந்த கடவுள், மேற்கூறிய எல்லா நன்மை களையும் தரும் திருநீருஞர் என்பதும் அவலமாகும். அவர் நீற்றப்பட்டு ஒழிந்தவராயிராமல், உயிருள்ளவ ராயிருந்து அருள் புரிகின்ருர். அவரே சின்மயப் பொருளான திருநீறு "நீற்றினை அணிந்தது என் இன்னிறைவன்" என்பதும் அவரே. இவர் யாரெனக் கண்டு சொந்தப்படுத்திக் கொள்பவனே திருநீற்றின் பயனை அனுபவிப்பவன்.

மத உன்மத்தம் இவரைக் காணவொட்டாமல் பலரைத் தடுத்து அலைக்கழிக்கின்றது. இவரைச் சொந்தப்படுத்தி அவருக்குள் இருக்கிறவன் புதுச் சிருஷ்டியாயிருக்கிருன். அவனிலுள்ள பழயவைகள் ஒழிந்து போயின; எல்லாம் புதிதாயின.

கடவுளுக்குப் பெண்டேது? பிள்ளையேது?
காமகுணலீலை முதலான தேது?

கடவுளுக்குப் பகடி சீட்டுத் தாய மேது?
காடுகளில் வேட்டை கட்குத் திரிவதேது?
கடவுளுக்குக் காமிகளின் தொழிலே யில்லை;
காருண்யத் தொழில் ஒன்றே கடவுள் பாரம்.

காருண்யத் தொழில் என்றால் என்ன? ஆபத்தில் அகப்பட்டுத் துன்பமனுபவிப்பவர்களுக்கு உதவி புரிவதே காருண்யத் தொழில். இதற்கு ஓர் உதாரணம் வருமாறு:

ஒரு வீட்டில் தீப்பற்றி எரிந்தது. வீட்டிலுள்ள பொருட்கள் எரிந்து அழிந்து விடாதபடி, அவசரமவசரமாக எடுத்து அப்புறப் படுத்தினார்கள். தொட்டிலில் கிடந்த குழந்தையையோ எடுக்க மறந்துவிட்டார்கள். தீப்பிடித்த வீட்டினருகில் நிற்கிற ஜனங்களின் கூச்சலில் குழந்தை அழுகிற சத்தமும் கேட்கவில்லை. பிள்ளையை யாருமே நினைக்கவுமில்லை. திடீரெனத்தாய் நினைத்து, என் பிள்ளை! என் பிள்ளை! என அலறினாள். தீ வீட்டைச் சுற்றிவிட்டது, ஆனால் மோட்டுப் பக்கத்தில் தீ ரைவில்லை. பிள்ளையைக் காப்பாற்ற யாராலும் துணிய முடியவில்லை தாயோ! உயிரை வெறுத்துத் துணிந்து வீட்டினுள் நுழைந்தாள். புகையால் மூச்சுத் திணறுகிறது; உஷ்ணமோ அதிகம்; திண்ணைப் பக்கம்

எரிந்து விழுகின்றன; தரையிலும் தீத்தழல்கள்; புகையால் கண்களும் தெரியவில்லை. குழந்தையைப் பாதுகாக்க வேண்டுமென்ற துடிப்பால் தடவித் தடவிப் போய்த் தீவிரமாய்த் தொட்டில் கயிற்றைத் தன் பெலத்தையெல்லாம் கூட்டி இழுத்து அற்று, தொட்டிலோடு. பிள்ளையை மார்போடணைத்து, பிள்ளையின் மேல் தீ விழாமல் பத்திரமாய் வெளியே கொண்டு வந்துசேர்த்தாள். தீயால் தனக்கு உண்டான வேதனை, சகிக்கமுடியாமல் கீழே சாய்ந்துவிட்டாள். பிள்ளை பத்திரமாய்ப் பாதுகாக்கப்பட்டது. தாயை மருத்துவமனைக்குக் கொண்டுபோய்ப் பாதுகாத்தார்கள். ஆறு மாதங்களுக்குப்பின் தாய் சுகமாகி வீடுவந்து சேர்ந்தாள். ஆனாலும் அவள் அழகு இழந்து, தலை வழுக்கையாகி முடியற்று, தேகமெல்லாம் தீப்பட்ட காயத்தால் நிறமும் அழகும் ஒழுங்குமற்று விகாரமாய்த் தோன்றினாள்.

பிள்ளையோ நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாய் வளர்ந்து, கல்வியிலும் தேர்ந்தாள். ஆனால் தாயாருடைய அழகுக் குறைவைக் கண்டு தாயை வெறுத்தாள். அம்மா என அழைக்கவும், வீட்டினுட் செல்லவும், தாயைத் தொடவும், தாயாரிடம் பேசவும் மனமற்று, வீட்டைவிட்டு வெளியேறி, தெரு

வுக்குப்போய்த் தனக்குத் திருப்தியுண்டாக்க மற்றப் பிள்ளைகளுடன் விளையாடினுள்; சிலவீடுகளுக்குப்போய் மற்றத் தாய்மாரைப் பார்த்துப் பேசினுள்.

மற்றயாரை அம்மா! என உரிமையோடு அழைக்க முடியும்? அம்மா என யாரை அழைத்தாலும், தாய்க் குரிய அன்பு அவர்களிடம் இருக்குமா? தனக்குத் திருப்தி உண்டாகக் கூடுமா? தாய்வீடுபோல் மற்ற வீடு உரிமையாகி விடுமா? பிள்ளை சோர்பும் மனக் கிலேசமும் உற்றவளாய், தாயைப்பற்றிய சரியான அறிவு அற்றவளாய்த் தயங்கித் தயங்கி, மெது மெது வாய் வீட்டுத் திண்ணையில் வந்து உட்கார்ந்தாள்.

மகளுடைய மனநிலையையும், ஆறுதலற்ற அலங் கோலத்தையும், மனவெறுப்பையும் கண்ட தாய், மகளிடம் நேரில் வந்து பேசினுல் ஓடிப்போய்விடுவாள் என்றறிந்து, வீட்டுக்குள் இருந்துகொண்டே, தானு கவே புலம்பிக்கொண்டிருப்பது போலப் பேசினுள். அவள் பேசினது என்னவென்ருல்: “நீ சிறு குழந்தை யாயிருக்கையில், நம்வீடு தீப்பிடித்து எரிந்தது; நீ தொட்டிலில் கிடந்தாய். வீட்டினுள் கிடந்த சாமான் களைத் தீக்குத் தப்புவித்தார்கள், உன்னைப் பாதுகாக்க மறந்து விட்டார்கள். உன் தாயாகிய நானே துணிந்து

எரிந்து விழுந்துகொண்டிருந்த வீட்டினுள் நுழைந்து, எல்லாக் கஷ்டங்களேயும் சகித்து,உன்னேத்தப்புவித்துப் பாதுகாத்தேன், உன்னேக் கஷ்டத்தோடு பெற்று வளர்த்த யான். உன்னே ஆபத்தினின்று தப்புவிக்கத் துணிந்த நிமித்தம், தீயினுல் சாகக்கூடிய விதமாய்க் காயமடைந்து. அழகு இல்லாமற்போய், இவ்வளவு அருவருக்கப் படத்தக்க விகார ரூபமாகிவிட்டேன். அதனுல் இன்னும் அதிகமாய் உன்னே நேசிக்கிறேன்'' என்முள்.

இதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த மகள்: தாயின் பெரிய அன்பை அறிந்து, தான் தாயை வெறுத்த அறிவீனத்தையும் தன் நன்றி கேட்டையும் அறிவீனமாயும் அவதூருயும் தாயைப் பேசினதை யெல்லாம் நினேத்து, உணர்ந்து அழுது. தாயைப் பார்த்து: அம்மா! எனது அறிவீனத்தால் தங்களே யான் அவதூருய்ப் பேசின குற்றத்தையும்; தங்களுடைய அன்பான ஆதரவுகளேயெல்லாம் மறந்து, தங்களது அரவணேப்பான கைகளேயும் தட்டிவிட்டு, தங்களுடைய அழைப்புக்கும் கீழ்ப்படியாமல், தங்களே விட்டுத் தூரமாய் அலேந்து திரிந்த நன்றிகேட்டையும் மன்னியுங்கள் என்று சொல்லிக் கெஞ்சினுள்.

தாயோ, தன்மகளுடைய உணர்வையும், தவறு தலை விட்டுத் திரும்பிய நல்லறிவையும் கண்டுமகிழ்ந்து மகளிடம் போய், மகளைக் கட்டியணைத்து ஆறுதல் கூறித் தேற்றினாள்.

மகள் தன்தாய் தன்மேல் கொண்டுள்ள அன்பால், தீயினால் நீற்றப்படவும் துணிந்த அரிய செய்கையை நினைந்து நினைந்துருகி, தாயின் அன்பால் கவரப்பட்ட வளாய், தாயைப்போற்றிப் புகழ்ந்து, தாயின் அன் புக்கு அடிமைபூண்டு கீழ்ப்படிந்து இன்புற்றாள்.

அவ்வாறே "அன்பைப் பெருக்கி நமதாருயிரைக் காக்கவந்த இன்பப் பெருக்காகிய இறைவன், காருண் யத் தொழில் ஒன்றே கடவுள் பாரம் என்பதைத் தன் மனித அவதாரத்தில் கொண்டு, ருக்வேதம் கூறியபடி: பலியாகி, இரத்தம் சிந்தி நம்மை மீட்டார். அவரிடம் மனதைத் திருப்பி, நம் உள்ளத்திலுள்ள காமம்—வெகுளி—மயக்கங்களை நீத்து, அவரை நம்பி ஏற்றுக் கொள்வதே திருநீறு அணிவதாகும்.

இத்திரு நீற்றை யார் அணியக் கூடும்?

முக்குற்றங்களால் பிடிக்கப்பட்டிருக்கிறேன்; இப் பிடிகளினின்று விடுதலையாக வேண்டுமென்று யா

உணருகிறுனே, அவன் மாத்திரம் அணியக்கூடும். உணர்ந்தாலும் போதாது. தனக்காக நீற்றப்பட்ட இறைவனை அறிந்து, நம்பி, அவருடைய பேரன்பைக் கண்டு, சிவ வாக்கியர் கூறின படி "உருக்கி நெஞ்சை உட்கலந்து உண்மையோடு இறைவனின் அன்பால் கவரப்பட்டு, தன் குற்றங்களை அவரிடம் அறிக்கை செய்து, விட்டு விட்டு, அவரிடம் மனதைத் திருப்பி, அவரை உள்ளத்தில் ஏற்றுக்கொள்கிறவனே திருநீறை அணிந்தவன். இங்கு திருநீறு என்பது சாணத்தைச் சுட்டுச் சாம்பலாக்கப் பட்ட வஸ்துவையல்ல, தன் பிள்ளையைத் தீயினின்றும் பாதுகாக்க, எரிந்துகொண்டிருக்கிற வீட்டினுள் உயிரை வெறுத்துப் புகுந்த தாயைப் போல, தன் உயிரை மன்னுயிர்கட்காகக் கொடுத்த இறைவனையே குறிக்கும்.

"என்பே விறகாய் இறைச்சி அறுத்திட்டுப்
பொன்போல் கனலில் பொரிய வறுப்பினும்,
அன்போ டுருகி அகம் குழைவார்க் கன்றி
என்போன் மணியினை எய்த வொண்ணுதே"

என்றபடி இறைவனின் அன்பை உள்ளத்தில் நினைந்துருகி, அவர்பால் தன் உள்ளத்தைத் திருப்பி, அவரை

நம்பி, அவரை உள்ளத்தில் ஏற்றுக்கொள்வதே திரு நீறணிவது,

இதையே விவிலிய நூல் "தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத்திரும்பி, இறைவனை விசுவாசித்து, சாம்பலில் உட்கார்ந்து, மனந்திரும்பினார்கள்; அதனால் இறைவன் அவர்களுக்கு அனுகூலமாயிருந்தார்" எனப் பல வாக்கியங்களில் கூறுகிறது.

யோனா. 3:5-10. எஸ். 4:1. மத். 11:21
எண். 19:17. எபி. 9:13-14.

இவ்வாறு கடவுள்பால் உள்ளத்தைத் திருப்பி, இறைவனுக்கேற்காத நினைவு, செயல், வசனங்களை ஒழித்து, தங்கள் உள்ளத்தைக் கடவுளுக்கு ஆலயமாக ஒப்புக்கொடுத்தவர்களைப் பற்றித் திருமந்திரங் கூறுவதையுங் கவனிப்போம்:

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு சுற்றாலை
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்;
தெள்ளித் தெளிவார்க்கு சீவன் சிவலிங்கம்;
கள்ளப்புலனைந்தும் காளா மணிவிளக்கே".

இவ்வாறு இறைவனை உள்ளத்தில் ஏற்றுக்கொள்ள மனதிருந்தும் முடியவில்லையே என்போர் பலர். தாயுமானூர் கூறுவதையும் கேட்போம.

"என்போல் எளியவரும்; எங்கெங்கே
பார்த்தாலும்
உன்போல் வலியவரும் உண்டோ பராபரமே!

கீழ்வரும் உதாரணத்தால் நம் எளிமைத் தன்மையையும் இறைவனின் வலிய தன்மையையும் காண்போம்:

காலரா என்ற விஷபேதி உண்டாகிப் பலர் மாளுகிற காலம் ஒன்றில், ஓர் யாசகன் பிச்சை ஏற்ற சோற்றைச் சாப்பிட வழக்கம்போல் ஒரு புண்ணியவதி வீட்டில் தண்ணீர் கேட்டான். இவளோ இவனிடத்தில்: இந்தப் பிச்சைச்சோற்றில் காலராக்கிருமிகள் ஒட்டியிருக்கும்: ஏனெனில், பல வீடுகளில் பிச்சை எடுத்து வந்திருக்கிறுய். இதுவரைக்கும் ஈக்களால் இந்தச்சோற்றில் காலராக் கிருமிகள் ஏராளமாகக் கொண்டுவந்து சேர்க்கப்பட்டிருக்கும்; இந்தச்சோற்றைச் சாப்பிட்டால் நீயும் காலராவில் சாவாய்; ஆதலால் இதைச் சாப்பிடாதே என்று அவனிடம் இரக்கங்

கொண்டு கூறினாள். அவனோ, இதுவரை அலைந்து திரிந்து யாசகம் எடுத்துவந்திருக்கிறேன். இப்பொழுது என் வயிறு "கொல்லன் உலைபோல கொதிக்குதடி என் வயிறு" என்று அழுகணிச் சித்தர் கூறியதுபோல கொதித்துக் கொண்டிருக்கிறது; ஆகையால் இந்தச் சோற்றையே சாப்பிடுவேன்; சுத்தமான சுடுசோறு எனக்கில்லையே; இல்லாததை நினைத்து ஏங்குவதில் பயனில்லையே. இந்தச்சோற்றையே சாப்பிடப்போகிறேன் என்றான். அவளோ இதைச் சாப்பிடாதே என்று தடுத்து, அவனுடைய பிச்சைப்பாத்திரத்தைப் பிடித்து இழுத்தாள்.

அவனோ இதுதான் அம்மா! இதையே சாப்பிடுவேன் என்று இழுத்தான். இதைப் பார்த்துக்கொண்டிருந்த இன்னொரு புண்ணியவாட்டி தன் வீட்டில் புதிதாய்ச் சமைத்த ஆகாரத்தை எடுத்து கறி, குழம்பு ஊற்றி வலிய இவனிடம் கொண்டுவந்து இதைச் சாப்பிடு என்றாள். உடனே பிச்சைப் பாத்திரத்தை அவன் விட்டுவிட்டு, சூடான வாசனையும் ருசியுமுள்ள புதிய ஆகாரத்தைச் சாப்பிட்டான். மணமும் ருசியுமுள்ள புதிய ஆகாரத்தைக் கண்டவன், இனி அந்தப் பழைய பிச்சைச்சோற்றை விரும்புவானோ? அதைக் கண்ணால்கூடப் பார்க்க விரும்பமாட்டான்.

இதுபோலவே ஒழிந்துபோகும் உலக இன்பத்தை அநேகர் விடமுடியாமல் சங்கடப்பட்டு உழலுகின்றார்கள். இறைவனோ இவனுடைய எளிய நிலைமையின் துன்பத்தை அறிந்தவராய், இவன்மேல் பரிதாபங்கொண்டு இவனைத் தம் அன்பால், வலிய இவனைத் தேடிவந்து தம் மேலான பரம நித்திய இன்பத்தை அருளித் தேற்றுகிறார். இறைவனுடைய வலிய அன்பால் தரப்பட்ட நிச்ய பேரின்பத்தைக்கண்டு பெற்று அனுபவிக்கும் ஒருவன், இனி ஒழிந்துபோகும் சிற்றின்பத்தைத்தேடி அலைவானோ? அதில் மதிமயங்கி ஏங்கிக் கொண்டிருப்பானோ? புன்மை தவிர்க்கும் திருநீற்றால் மனம் மாறுதலாகிய உள்ள சுத்தி என்னும் மறுபிறப்புடையவனாகி. வருத்தந்தணிக்கும் திருநீற்றால் துன்பத்திலும் இன்பம் பெற்று, "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற ஆவலால் மற்றைய மானிடரும், தீய நெறிவிட்டுத் தூய நெறிபற்றிப் பேரின்பம் பெற்றுய்யப் பணி செய்வானன்றோ!

படமாடுங் கோயில் பரமர்க்கொன் றீயில்
நடமாடுங் கோயில் நம்பர்க்கிங் காகா
நடமாடுங் கோயில் நம்பர்க் கொன் றீயில்
படமாடுங் கோயில் பரமர்க் கங் காகும்.

என்ற திருமூலர் வாக்கைப் பகுத்தறிந்து, ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கிப் பாரினை உய்விக்கப் பயன்பட உழைத்துத் பரமனை மன்றாடி பிரார்த்திப்போமாக.

வெண்ணீற்றிறைவனடி வாழ்க!

கவனிப்பு:- "பரமகுரு" என்ற நூலையும் கருத்துடன் ஆராய்க. விலை, 30 புதுக்காசு. தபால் செலவு. 15 புதுக்காசு.

---

கிடைக்குமிடம்:-

**S. T. இரத்தினம்,**
66, செட்டியக்குடித்தெரு,
திருச்செந்தூர்,
திருநெல்வேலி மாவட்டம்.

காந்தி அச்சகம், ஸ்ரீவைகுண்டம்.

## இதர நூல்கள்

"தேடித் திருவிளக்கு வை" — புலஸ்திய மகரிஷி.

"எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும், அப்பொரு
மெய்ப்பொருள் காண்ப தறிவு" திருவள்ளுவர்.

அறம், பொருள், இன்பம், வீடும் பயப்பது நூ
பயன் ஆதலால், மானிடர் தங்கள் வாழ்வில் நல்லநூ
களைக் கற்று ஈடேற முயற்சிப்பார்களாக.

| | | விலை ரூ. |
|---|---|---|
| | | 0— |
| 1 | கைலாச மகாரிஷி | 1— |
| 2 | ஷி இங்கிலிஷ் | 1— |
| 3 | கிருஷ்ணபிள்ளை | 0— |
| 4 | சண்முகநாத கவிராயர் | 0— |
| 5 | அகஸ்தியர் ஞானம் | 0— |
| 6 | பரமகுரு | 1— |
| 7 | சந்திரலீலாள் | |

கிடைக்குமிடம் :-

S. T. இரத்தினம்,

திருச்செந்தூர் Po. திருநெல்வேலி மாவட்டம்.